# ஆகஸ்ட் 27 - புனித மோனிக்கம்மாள் (333 – 387)

இவள் பத்ரீசியுஸ் என்னும் அவிசுவாசியை மணமுடித்தாள். அவர் கடும் கோபகுணம் படைத்தவர். அவரால் வந்த இக்கட்டுகளையெல்லாம் மோனிக்கா பொறுமையுடன் சகித்தாள். இவளது நல்வாழ்வும், சாந்தகுணமமும் இவளுடைய கணவனின் குணத்தை மாற்றியது. அவர் கிறிஸ்தவராகி அடுத்த ஆண்டில் இறந்தார்.

மகன் அகுஸ்தீன் இவருக்குப் பெரும் சிலுவையாக இருந்தார். அவர் மனம் திரும்புவதற்காக தாய் உருக்கமாக நெடுங்காலம் செபித்தாள். தாயை விட்டு அகுஸ்தீன் இத்தாலியா சென்றார். தாய் அவரைத் தேடிச் சென்றாள். மிலான் நகரில் அவரைக் கண்டு ஏற்கனவே ஆயரான புனித அம்புரோஸ் என்பவரது முயற்சியால் அகுஸ்தீன் தமது தப்பறையான கொள்கைகளை விட்டுவிட்டு அடுத்த ஆண்டில் அவர் மனந்திரும்பினார். ஞானஸ்நானம் பெற்றார். சற்றுப் பின் தாயும் மகனும் சில நண்பர்களுடன் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார்கள். வழியில் தன் மகனது கரங்களில் அவர் உயிர் விட்டாள்.

சிந்தனை: “ஓ ஆண்டவரே, தூயவரும் தவ வாழ்க்கை நட்த்தியவளுமான ஒரு விதவையின் தாழ்ச்சியுள்ள மன்றாட்டை நீர் புறக்கணிப்பீரோ? அவள் உம்மிடம் பணம் கேட்டு மன்றாடவில்லை. உலக காரியங்களுக்காக செபிக்கவில்லை. தன் மகனுடைய அழியாத ஆன்மா மோட்சம் சேரவேண்டும் என மன்றாடினாள். கண்ணீர் அழுகையுடன் அவள் சமர்ப்பித்த மன்றாட்டை ஏற்றுக் கொண்டீர்”. (புனித அகுஸ்தீன்)




செபம்: ஆண்டவரே, தங்கள் மக்களின் உடலைவிட ஆன்மாவை அதிகமாக நேசிக்கும் தாய்மாரை உலகுக்குத் தாரும்.